23rd July 1957]

செய்து மூலப் பொருள்கள் எங்கெங்கே இருக்கின்றன என்று கண்டு பிடிக்கவேண்டி இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்துமா ? அதற்கு எதாகிலும் திட்டம் தயாரிக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : எந்த எந்த ஜில்லாவில் எந்தவிதமான உலோகப் பொருள்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறதோ அந்த இடங்களில் ஜியாலாஜிகல் சர்வே செய்யும்படியான ஏற் பாடு செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் மூலப் பொருள்கள் இருக்கின்றனவா என்று கண்டு பிடிக்க சர்வே செய்வது என்பது சரியல்ல. மூலப்பொருள்கள் இருக்கும் இடங்களைத் தெரிந்தால் தான் அங்கு சர்வே செய்வது நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்த அந்த இடங்களில் தான் சர்வே ஆரம்பிக்கப்படும்.

Sri K. VINAYAKAM : Sir, has this Geological Survey party, after its labours, produced any result?

The Hon. Sri R. VENKATARAMAN : Very good results.

Sri M. P. SUBRAMANIAM : நம்முடைய அரசாங்கத்தின் கீழ் ஒரு ஜியாலாஜிகல் டிபார்ட்மெண்டை ஆரம்பிப்பது என்றும் அப்படி ஆரம்பித்து ஜியாலாஜிகல் சர்வே செய்ய ஏற்பாடு செய்யப்படும் என்று இதற்கு முன்பு இந்தச் சபையில் அறிவிக்கப்பட்டது. அதே மாதிரி நம்முடைய ராஜ்யத்தில் இப்பொழுது ஆரம்பித்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : ஜியாலாஜிகல் சர்வே செய்வ தற்கு நமக்கு ஆட்சேபணை இல்லை. அதற்கு வேண்டிய எக்ஸ்பர்ட்டுகள் நமக்குப் போதிய அளவில் கிடைக்கவில்லை. மத்திய அரசாங்கம் சில எக்ஸ் பர்ட்டுகளை கொடுத்தார்கள். அவர்களை கடனாக நாங்கள் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவேதான் அதில் சற்று தாமதம் இருக்கிறது.

Sri J. MATHA GOWDER: மூலப்பொருள்கள் எந்த எந்த ஜில்லாவில் கிடைக்கிறது என்று தெரிந்த பிறகு அங்கே சர்வே செய்யலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால் நீலகிரியில் மைக்கா, தங்கச் சுரங்கம் முதலி யவைகள் இருக்கின்றன என்று நன்றாகத் தெரிய வருகிறது. வெள்ளைக் காரர்கள் இருந்த காலத்தில் தங்கம் இருக்கிறது என்பதை நேராகப் பார்த்திருக்கிறார்கள். அதையும் அங்கிருந்து எடுத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்ய ஏன் அரசாங்கம் மறந்தது என்பதைக் கேட்கிறேன்.

Mr. SPEAKER : இப்பொழுது அங்கத்தினர் கன்யாகுமரியிலிருந்து நீலகிரிக்குப் போய் விட்டார்கள். அடுத்த கேள்விக்குப் போகலாம்.

Location of the office of the Superintending Engineer

* 203 *Q.*—**Sri A. R. SUBBIAH MUDALIAR** : Will the Hon. the Minister for Public Works be pleased to state the reasons for locating the office of the Superintending Engineer for the Sathanur-Krishnagiri Project at Madras?

The Hon. Sri P. KAKKAN : The Superintending Engineer for Sathanur and Krishnagiri Projects is also in charge of Araniar Project. These three projects are situated in different directions away from rail-heads and there is also no central point from which these projects could be reached conveniently. The question of fixing the headquarters of the Circle either at Tiruvannamalai or at Vellore was considered but dropped as there was not suitable and sufficient accommodation in either of these places for locating the Circle office. These places are also inconveniently situated for proper supervision and control of the Araniar Project. Hence

[23rd July 1957

Madras which is centrally situated from all these three projects was fixed as headquarters for the Circle. Suitable accommodation was also available in Madras at that time due to the closure of special Irrigation Division.

SRI A. R. SUBBIAH MUDALIAR : ஆரணியார் ப்ராஜெக்ட் இப்பொழுது முடிவாகிவிட்டது. சாத்தனூர் ப்ராஜெக்ட் சென்னையிலிருந்து 100 மைல் இருக்கிறது. கிருஷ்ணகிரி ப்ராஜெக்ட் சென்னையிலிருந்து 150 மைல் இருக்கிறது. ஆரணியார் ப்ராஜெக்ட் முடிவடைந்து விட்டபடியால் சாத்தனூர் ப்ராஜெக்ட், கிருஷ்ணகிரி ப்ராஜெக்ட் இந்த 2 projects-க்கு centre ஆக ஒரு இடத்தில் சூப்ரண்டெண்டிங் இஞ்சினீயர் ஆபிசை வைக்க சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : மூன்று ப்ராஜெக்ட்களும் செப்டெம்பர் மாதம் முடிவடையக்கூடிய தருவாயில் இருக்கின்றன. அதனால் மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

Basin Bridge Power House

* 204 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there were any accidents in the Basin Bridge Power House during December 1955 and March 1957 ; and

(*b*) the number of deaths that occurred as a result of these accidents?

THE HON. SRI V. RAMIAH : (*a*) The answer is in the affirmative.

(*b*) Two, one in December 1955 and the other in March 1957.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த இரண்டு தொழிலாளர்கள் இறந்ததற்குக் காரணம் அந்த பாக்டரி இன்ஸ்பெக்டர் அந்த பாக்டரியை சரியானபடி பார்க்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறது அல்லவா ?

THE HON. SRI V. RAMIAH : ஆபத்துகள் எப்பொழுது ஏற்படும் என்று சொல்ல முடியாது. பாக்டரி இன்ஸ்பெக்டர் பார்வையின் குறைவால் இப்படிப்பட்ட ஆபத்துக்கள் ஏற்படுகின்றன என்று சொல்ல முடியாது. அதிகாரிகளுடைய அஜாக்கிரதையினால் இப்படிப்பட்ட ஆபத்துக்கள் ஏற்பட்டால்தான் அவர்களின் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

SRI S. PAKKIRISAMI PILLAI : இம்மாதிரியான நிகழ்ச்சிகள் அநேகம் தடவை இந்த பவர் ஸ்டேஷனில் ஏற்படுகின்றன. அங்குள்ள தொழிலாளி உயிர் துறந்ததற்குக் காரணம் அங்குள்ள ஸ்டீம் பாயிலர் வெடித்து அதனால் இறந்தான் என்று நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். ஸ்டீம் பாயிலர் ஆக்ட் பிரகாரம் அந்த அந்த காலத்தில் அங்குள்ள ஸ்டீம் பாயிலர்களை சுத்தம் செய்யாத காரணத்தால்தான் அந்த ஸ்டீம் பாயிலர்கள் வெடித்து இருக்கின்றன. இது அந்த அந்த அதிகாரிகளின் அஜாக்ரதையால் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான நிகழ்ச்சி அஜாக்கிரதை காரணமாக ஏற்பட்டதன் காரணமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பேரில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அந்த அதிகாரிகளின் பேரில் யார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைத்தான் கேட்கிறேன்.

THE HON. SRI V. RAMIAH : அதிகாரிகளுடைய அசிரத்தையினால் இந்த ஆபத்து ஏற்பட்டது என்று நான் சொல்ல முடியாது. காரணம் எந்த எந்த நேரத்தில் என்ன என்ன ஆபத்து ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது. இதெல்லாம் ஆக்ஸிடெண்டாக ஏற்படக்கூடியதுதான். சாதாரணமாக ஏற்படக்கூடியது அல்ல.